# ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்

# உளச்சார்புப் பரீட்ச்சை - கல்வியாண்டு 2022/2023

கடந்த **2023.09.10**ம் திகதி “வாரமஞ்சரி” பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட **2022/2023** கல்வியாண்டுக்கான மாணவர் அனுமதிக்கான உளச்சார்பு பரீட்ச்சை விளம்பரம் தொடர்பாக**.**

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் மேற்படி உளச்சார்பு பரீட்ச்சைக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி **2023.09.29**ம் திகதி வரைக்கும் நீடிக்கப்பட்டுள்ளது**.**

மேலதிக விபரங்களுக்கு [www.uwu.ac.lk](http://www.uwu.ac.lk) எனும் பல்கலைக்கழக வெப்தளத்திற்கு தயவு செய்து பிரவேசிக்கவும்.

**பதிவாளர்**
**ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்**
**பஸ்ஸறை வீதி**
**பதுளை**
20.09.2023

Uva Wellassa University

# ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்
# மாணவர் அனுமதிகள்
# கல்வியாண்டு – 2022/2023

## உளச்சார்புப் பரீட்சை

இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களின் பட்டப்பயில் நெறிகளுக்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதி 2022/2023 கையேட்டின் பிரிவு 1.2 இன் படி ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்திற்கு 2022/2023 கல்வியாண்டுக்கான அனுமதியைப் பெற ஆகக் குறைந்த தகமைகள் கொண்டுள்ளவர்களிடமிருந்து மேற்படி கல்வியாண்டிற்கான பின்வரும் பட்டப்பயில் நெறிகளுக்கு உளச்சார்புப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- கணினி விஞ்ஞானமும் தொழிநுட்பமும்
- கைத்தொழில் தகவல் தொழிநுட்பம்
- முயற்ச்சியாண்மையும் முகாமைத்துவமும்
- விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் நிகழ்ச்சிகள் முகாமைத்துவம்

விண்ணப்பித்த கற்கை நெறிக்கேற்ப உளச்சார்பினை பரீட்சிப்பதற்காக இப்பரீட்சை ஆங்கில மொழி மூலம் நடைபெறும்.

ஒவ்வொரு கற்கை நெறிக்குமான குறைந்தபட்ச தகமைகள் 2022/2023 கல்வியாண்டிற்கான பல்கலைக்கழக பட்டப்பயில் நெறிகளுக்காக அனுமதிக் கையேட்டின் (க.பொ.த. (உ/த) 2022 பரீட்சையை அடிப்படையாக கொண்டது) 2.2.8.14, 2.2.8.15, 2.2.8.16 மற்றும் 2.2.8.18 ஆகிய பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர்கள் **2023 செப்டம்பர் 20 அன்று அல்லது அதற்கு முன்னர்** ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் இணையத்தளத்தில் (https://www.aptitude.uwu.ac.lk/) இணையவழி (online) ஊடாக தங்களது விண்ணப்பத்தை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இணையவழி விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்களை நீங்கள் பதிவேற்ற வேண்டியது கட்டாயமாகும்:

✓ ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் இலங்கை வங்கி பதுளை கிளையின் கணக்கிலக்கம்: 78166821 இற்கு இலங்கை வங்கியின் ஏதாவதொரு கிளையின் ஒரு பரீட்சைக்கு ரூபா. 1000/- வீதப்படி வைப்பு செய்யப்பட்ட பரீட்சைக் கட்டணத்தின் பற்றுச் சீட்டு. (தயவுசெய்து பற்றுச் சீட்டின் ஒரு பிரதியை உங்களுடன் வைத்துக் கொள்ளவும்). இக்கட்டணம் எக்காரணத்தைக் கொண்டும் மீளளிக்கப்படமாட்டாது. [உ+ம்: நீங்கள் இரண்டு பாடங்களுக்கு பரீட்சை எழுத விரும்பினால், கட்டணம் ரூபா 2,000/- (2 x 1,000/-) செலுத்த வேண்டும்]

உளச்சார்புப் பரீட்சைக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் மற்றும் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் தகுதியானவர்களுக்கு மின்னஞ்சல் முறை மூலம் அனுப்பப்படும்.

எல்லா கற்கை நெறிகளுக்குமான பரீட்சை விண்ணப்பங்களையும் அதனுடன் தொடர்புடைய பரீட்சைக் கட்டணத்துடன் ஒரே விண்ணப்பப்படிவத்தில் அனுப்பவும்.

செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் வேண்டப்பட்ட பரீட்சைத் தாளின் எண்ணிக்கையை விட குறைவாக இருப்பின் பரீட்சாத்தியின் முன்னுரிமை ஒழுங்கிற்கு அமையவே கவனத்தில் கொள்ளப்படும்.

உளச்சார்பு பரீட்சைக்கான பரீட்சை நிலையங்களும் அதற்காக ஒதுக்கப்பட்ட இலக்கங்களும் கீழே தரப்பட்டுள்ளன. உங்களுக்கு மிகவும் வசதியான பரீட்சை நிலையங்களைத் தேர்ந்தெடுக்கவும்.

| பரீட்சை நிலையம் | **பரீட்சை நிலைய இலக்கம்** |
|---|---|
| கொழும்பு | 01 |
| யாழ்ப்பாணம் | 02 |
| கண்டி | 03 |
| மாத்தறை | 04 |
| பதுளை | 05 |
| அநுராதபுரம் | 06 |
| மட்டக்களப்பு | 07 |
| குருணாகலை | 08 |

விண்ணப்பதாரிகள் தெரிவு செய்த பரீட்சை நிலையங்களை சில நேரங்களில் ஒதுக்க முடியாமல் போனால், அதற்கு பதிலாக வேறு பரீட்சை நிலையங்கள் ஒதுக்கப்படும்.

**பதிவாளர்**
**ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்**
**பஸ்ஸறை வீதி**
**பதுளை**
**06 செப்டம்பர் 2023**

தொலைபேசி: 055-2226622/ 055-3561752
தொலைநகல்: 055-2226633
வெப்தளம்: www.uwu.ac.lk